REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 16உ வியாழன் (30—6—55) ★ ★ வெளியூர்: ஆனி 17உ வெள்ளி (1—7—55) [இதழ் 14

பஞ்சாப் மந்திரி சபையில் பிளவு-பிணக்கு!

காங்கிரஸ் தலைவர் தேபர் ஒப்பம்

பஞ்சாப் மாநில மந்திரிகளான லாலா ஜெகத் நாராயண்—பிரதாப் சிங்—கைரான் ஆகியோரிடையே பிளவும் பிணக்கும் இருந்து வருவதாக பத்திரிகைகளில் செய்தி வந்தது.

இப்போது, பஞ்சாப் மந்திரி சபையில் பிளவு இருப்பதும், அது நாளுக்குநாள் வலுத்து வருவதும் உண்மைதான் என்று காங்கிரஸ் தலைவர் யு. என். தேபர் உறுதி செய்திருக்கிறார்.

காங்கிரஸ் தலைமைப் பீடம், பஞ்சாப் மந்திரி சபையில் ஏற்பட்டுள்ள பிளவுக்கு 'ஒட்டு' போட தீவிரமாக முயற்சித்து வருவதாகவும் அவர் கூறியிருக்கிறாராம்.

மத்திய பாரத் அரசாங்கத்தின் முறைகேடு!

'அரசாங்க நிலையிலேயே கோவா இணைப்பு நிகழ வேண்டும்'

'கோவாவில் நிகழும் அட்டூழியத்தை உலகம் உணரச் செய்யவேண்டும்'

புதிய குழுவின் கடமை பற்றி மக்கள் சபை உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி

"இந்தியாவுடன் கோவா இணைவது குறித்து, அரசாங்க நிலையில்தான் பரிகாரம் தேடப்படவேண்டும் என்ற அடிப்படைக் கோட்பாட்டில், மக்கள் சபை உறுப்பினர் அனைவரும் உடன்பாடு கொண்டுள்ளன.ர் இத்துறையில் எந்தவித போர் நடவடிக்கையையும் மேற்கோள்ளக்கூடாது என இந்தியப் பேரரசு நேர்மையான போக்கைக் கொண்டிருக்கிறது. இப்பிரச்சினை குறித்து ஆராய இருக்கும் குழுவும், எவ்வகை படையெடுப்பையும் கோரப் போவது கிடையாது."

"கோவா இணைப்புப் பிரச்சினையில் பலதிறப்பட்டக் கட்சியைச் சேர்ந்த மக்கள்சபை உறுப்பினர்களிடையே ஒன்றுபட்டக் கருத்து உருவாகி இருப்பது, மக்கள்சபை வரலாற்றிலேயே இதுதான் முதல் முறையாகும். இவ்வொருமைப்பாட்டை, இங்குள்ள மக்களே மட்டுமல்லாமல், போர்ச்சுகீசிய அதிகாரிகள் கோவாவில் புரிந்துவரும் அட்டூழியங்களைக் காண மறுத்துக் கண்களை மூடிக்கொண்டிருக்கும் உலக மக்களும், உணர்ந்துகொள்ள வேண்டும்."

"நிகழ்கால நிலைமைக்குச் சார்பாக பொதுஜனக் கருத்து, இங்கு போதிய அளவில் எழுச்சிபெற்று இருக்கிறது. எனவே, பிரச்சினையில் உடனடியாகப் பரிகாரம் தேடியாகவேண்டும் என்ற துடிதுடிப்பை போர்ச்சுகீசிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தும் வகையில், உலக மக்கள் ஆதரவைத் திரட்ட வேண்டியதுதான் இப்போழுது முக்கியமாகத் தேவைப்படுகிறது. இக்கருத்தைக் குறியாகக் கோண்டே, கோவா குழு உருவாக இருக்கிறது."

—இவ்வாறு, மக்கள் சபை உறுப்பினர் மாநாட்டு அமைப்பாளர்களில் ஒருவரான டாக்டர் எ கிருஷ்ணசாமி அவர்கள், நேற்று மாலை காஸ்மோபாலிட்டன் கிளப்பில் பத்திரிகையாளரிடம் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் டாக்டர் எ. கிருஷ்ணசாமி, கோவாவில் போர்ச்சுகீசியர் நடத்திவரும் கொடுமைகள் பற்றிக் குறிப்பிட்டுப், இந்தியாவுக்குமட்டுமின்றி இதர நாடுகளுக்கும், இந்தப் பிரச்சினைக்கு ஒரு சமாதானமான முடிவு காண்பதில் அக்கரை இருந்தாக வேண்டும் என்றும், குறிப்பாக 'நேட்டோ' நாடுகள், தங்களின் போர்ச்சுகீசிய நண்பர்களுக்கு, 'அவர்கள் நடத்தும் இந்தக் கொடுங்கோன்மை, ஆசியாவில் தங்களுக்கு இருக்கும் நட்புறவுக்கு அழிவு தேடும்,' என்று எச்சரிக்க வேண்டிய கடமை இருககிறது என்றும், மக்கள் சபை உறுப்பினர்கள் இதனை உலகத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றனர் என்றும் தெரிவித்தார்.

போர்ச்சுகீசிய அதிகாரிகள் நடத்திவரும் மிருகத்தனமான கொடுமைகள் பற்றி மக்கள் சபை உறுப்பினர்கள் கூர்ந்து கவனித்து வந்திருப்பதாயும், ஐ. நா. சபைக் குழு இந்தப் பிரச்சினை பற்றி கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையின் சாராம்சங்களை ஒரு துண்டு வெளியீடாகக் கொணரப் போவதாகவும், அதனைக் கொண்டு, கோவாவில் நடைபெறுவனவற்றை மக்கள் நன்கு உணர முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கோவா விடுதலைப் பிரச்சினைக்காகத்தான், இந்திய மக்கள் சபையின் சரித்திரத்திலேயே முதன் முதலாக எல்லாக் கட்சியினரும் ஒன்று சேர்ந்திருக்கின்றனர் என்றும், கோவா இந்தியாவுடன் இணைவது, அரசாங்க நிலையிலேயே நடைபெற வேண்டும் என்றும், ஒரு வெளிநாட்டு அரசாங்கத்தின் மீது, நாம் 'போலீஸ் நடவடிக்கை'

(4-ம் பக்கம் பார்க்க)

குடி பெயர்ந்தோர் குடும்பங்களுக்கு !

வேலை வசதி செய்து தர இந்திய சர்க்கார் திட்டம்

ரூ. 10 கோடி செலவில் புதிய தொழிற்சாலை நிறுவப்படும்?

கல்கத்தா, ஜூன் 30—

குடிபெயர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க இந்திய சர்க்கார் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 10 கோடி செலவில் புதுத் தொழிற்சாலை நிறுவும் திட்டம் ஒன்று சேர்க்கப்பட இருப்பதாக மத்திய சர்க்கார் புனர்வாழ்வு அமைப்பு இலாகா அமைச்சர் கூறியிருக்கிறார்.

ஐதராபாத்தில் கோதவரிக்கு அண்மையில் 5,000 ஏக்கர் நிலம் கிடைத்திருப்பதில் வங்க மாநிலத்தைச் சேர்ந்த 1,000 குடிபெயர்ந்தோர் குடும்பங்கள் புனர்வாழ்விப்பு பெறும் என்று குறிப்பிட்டார்.

காங்கிரஸ் தலைவர் விஜயத்தை அரசாங்கம் விளம்பரம் செய்வதா?

கட்சிப் பிரச்சாரத்திற்கு வரிப் பணத்தைப் பயன்படுத்துவதா?

மாற்றுக் கட்சி ஏடுகள் கண்டிக்கின்றன

மத்திய பாரத் அரசாங்கம் மழுப்புகிறது

மத்திய பாரத் மாநிலத்தில் காங்கிரஸ் தலைவர் தேபர் சுற்றுப் பிரயாணம் செய்தார். அவருடன் மேற்படி அரசாங்க விளம்பரத் துறை அதிகாரி ஒருவரும், புகைப்படம் எடுப்போரும் சென்று, அவர் சுற்றுப் பயண நிகழ்ச்சிகளை, மத்திய பாரத் அரசாங்கம் விளம்பரப்படுத்தியது.

இந்த முறைகேட்டை ம. பா. ஏடுகளில் சில, விளக்கமாக எடுத்துக் காட்டி, அரசாங்கப் போக்கை வன்மையாகக் கண்டித்துள்ளன.

இதற்கு விளக்கம் தரும் வகையில், முதல் மந்திரியான தகட்மால் ஜெயின், காங்கிரஸ் தலைவருடன் சில அமைச்சர்களும் சுற்றுப் பயணம் செய்ததாலும், அதுவுமன்றி முக்கிய செயல் ஏற்பாட்டை காங்கிரஸ் தலைவர் சுட்டிக் காட்டக் கூடும் என நம்பப்பட்டதாலும், அரசாங்க விளம்பரத் துறை அதிகாரியும், புகைப்படம் பிடிப்போரும் காங்கிரஸ் தலைவருடன் செல்ல வேண்டியது கட்டாயமாயிற்று என்று குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் தலைவர் தேபரின் சுற்றுப் பயண நிகழ்ச்சிகளையும், வாயுரைகளையும் விளம்பரப்படுத்துவதில், மத்திய பாரத் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது என்ற உண்மையை, ஒளிவு மறைவு இன்றி முதல் மந்திரி ஒப்புக்கொண்டார் அரசாங்கத்தின் முறைகேட்டிற்கு, எதைக் காரணமாக முதல் மந்திரி குறிப்பிட்ட போதிலும், எதிர்க்கட்சி ஏடுகளால் சுட்டிக் காட்டப்பட்ட அரசாங்க ஒழுங்கீனப் போக்கை, முதலமைச்சரால் அறவே மறுத்துவிட முடியவில்லை.

அரசாங்கத் தொடர்பற்ற எந்த விஷயங்களையும் விளம்பரப்படுத்துவதை, அரசாங்கம் கண்டிப்பாக மேற்கொள்ளக்கூடாது என, ஒரு கட்டளையையும் முதல் மந்திரி, அரசாங்க விளம்பரத் துறை அதிகாரிகளுக்குப் பிறப்பித்துள்ளார்!

'வட்டார மொழியே முதலிடம் பெற வேண்டும்'

'அனைத்துலகக் காரியங்களுக்கும் அறிவியல் முன்னேற்றத்திற்கும் ஆங்கிலம் கற்பதவசியம்'

மத்திய அரசாங்க மந்திரி கே. சி. ரெட்டி கருத்து

திருச்சி, ஜூன் 28—

"ஒரு பகுதி மக்களில் மிகப் பெரும்பான்மையினரின் மொழியான வட்டார மொழிதான் முதல் இடம் பெற வேண்டும்; இதை யாரும் மறுக்க முடியாது;

"ஒவ்வொரு வட்டத்திலும் அந்த வட்டார மொழியே போதனு மொழியாகவும் இருக்க வேண்டும்;

"இந்தி, வட்டார மொழியின் துணை மொழியாக இருக்க வேண்டுமே தவிர, வட்டார மொழியை வீழ்த்துவதாக அமையக் கூடாது;

"நான் ஆங்கிலம் மீது பற்றுக்கொண்டவன்; ஆங்கிலத்தில் அறிவுச் செல்வம் ஏராளமாக இருப்பதாலேயே அதனை விரும்புகிறேன்;

"இந்தியா, வெளி நாடுகளுடன் கொள்ளும் உறவில் ஆங்கிலம் எவ்வித ஐயமுமின்றி முக்கியமான இடம் பெறும்; அனைத்துலகக் காரியங்களுக்காகவும், தொழில், விஞ்ஞானத் துறை முன்னேற்றத்திற்காகவும் ஆங்கிலம் கட்டாயம் பயின்றாக வேண்டும்,"

—என்று மத்திய அரசாங்க உற்பத்தி இலாகா மந்திரி கே. சி. ரெட்டி, இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசியிருக்கிறார்.

இந்தியின் நிலை?

மேலும் அவர் குறிப்பிட்டார்:—

"நான், இந்தி மொழி எந்த ஒரு வட்டார மொழியாகவும் ஆக்கப்படுவதை விரும்பவில்லை; இந்தியைக் கட்டாயமாக்குவதையும் நான் எதிர்க்கிறேன்; எந்த ஒரு வட்டத்திலும் இந்தி மொழி போதனு மொழியாக புகுத்தப்படக் கூடாது;

"இந்தியாவின் உள்நாட்டுக் காரியங்களுக்குமட்டும், இன்று ஆங்கிலம் பெற்றிருக்கும் இடத்தை இந்தி மொழி பெறுவது உரியதாகும்."

மாநில மாநாடு

★

மாநில மாநாட்டை விரைவில் நடைபெறச் செய்வதற்கான முயற்சிகளில் வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் அம்பில்-தருமலிங்கம் அவர்களும் பிற நிர்வாகிகளும் ஈடுபட்டிருக்கின்றனர்.

அன்று அவர்களும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் 19—6—55-ஆம் நாள் திருச்சி வந்திருந்தகாலை, மாநாடு நடத்துவதற்கு ஏற்ற இடம் என்று, வரவேற்புக் குழுவினர் தேர்ந்தெடுத்திருந்த மூன்று இடங்களைப் பார்வையிட்டனர்.

மூன்று இடங்களில் சிறந்த இடம் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லி, அந்த இடத்தின் அனுமதியைப் பெறும்படி வரவேற்புக் கழகத் தலைவரிடம் கூறினார்கள்.

இடத்தின் உரியவரிடத்தில் அனுமதி பெறும் முயற்சியை வரவேற்புக் குழுத் தலைவர் மேற்கொண்டுள்ளார்.

மாநில மாநாட்டு நிதியை எவ்வளவுக்கெவ்வளவு விரைவாக மாவட்டக் கழகங்கள் திரட்டித் தருகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு விரைவாக மாநாடு நடைபெறும்.

கழகத் தோழர்களும், கிளைக் கழகங்களும் தங்கள் கடமையைச் செய்ய முன்வருவார்களாக!

"அறிவகம்" சென்னை
30—6—55

பொறுப்பாளர்,
தலைமை நிலையம் (தி. மு. க.)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 30—6—'55 வியாழன்

இதுவா உதவி?

"கிராம பாங்கிகள் தரும் கடனுக்கு வாங்கப்படும் $6\frac{1}{4}$ சதவிகித வட்டி மிக அதிகமானது; ரிசர்வ் பாங்கி, மாநில பாங்கிக்கு $1\frac{1}{2}$ சதவிகிதத்திற்குக் கடன் தருகிறது; மாநில பாங்கி மாவட்ட மத்திய பாங்கிகளுக்கு $2\frac{1}{2}$ சதவிகிதத்திற்குக் கடன் தருகிறது; மாவட்ட பாங்கிகள் கிராம பாங்கிகளுக்கு $4\frac{1}{2}$ சதவிகிதத்திற்குக் கடன் தருகின்றன; பின்பு, கடன் வாங்குபவர், கிராம பாங்கியிடம் $6\frac{1}{4}$ சதவிகித வட்டிக்கு வாங்க வேண்டியுள்ளது."

"$1\frac{1}{2}$ சதவிகிதத்தில் துவங்கும் வட்டி விகிதம், கடன் வாங்குபவர் கைக்கு வரும்போது $6\frac{1}{4}$ சதவிகிதமாகி விடுகிறது; எனவே, இதுபற்றி மத்திய பாங்கிகள் ஆலோசித்து ஆவன செய்ய வேண்டும்," என்று, சென்னை மாநில கூட்டுறவு இலாகா ரிஜிஸ்திரார் வ. பழனியப்ப முதலியார், கிராமக் கூட்டுறவு பாங்கி ஒன்றைத் திறந்துவைக்கும்போது குறிப்பிட்டதாகச் செய்தி ஒன்று வந்திருக்கிறது.

'விவசாயிகளுக்குக் கடன் கிடைப்பதற்கான வேறு ஏற்பாடுகளைச் செய்யாமல், அவர்கள் வாங்கிய கடனை திருப்பித் தரும் காலத்தை ஒத்திப்போடுவதற்கான சட்டமியற்றுவது, விவசாயிகளுக்குக் கடன் ஏதும் கிடைக்காமற் செய்துவிடுவதாகும்; கடன் பெற முடியாவிட்டால் சிறு சிறு நிலப்பரப்பில் தங்கள் குடும்ப வாழ்க்கையை ஒட்ட வைத்திருக்கும் விவசாயிகள், தொழிலுக்குத் தேவையான மூலதனச் செலவுக்குப் பணமின்றி மிகுந்த இன்னல்களுக்கு ஆளாகக்கூடும்,' என்று கூறப்பட்டது — ஆச்சாரியார், சுமார் மூன்றாண்டுகளுக்குமுன் விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவந்தபோது!

கிராமப்புறங்களில் வாழ்வோர் — குறிப்பாக விவசாயிகள், கடன் வாங்கி பயிர்த்தொழில் செய்தும், எதிர்பார்த்த பலனைப் பெறுமையினாலேயே, அவர்களில் பெரும்பாலானோர், தாங்கள் விவசாயத்திற்கென வாங்கிய கடனைத் திருப்பித் தர இயலாதவர்களாயிருந்தனர். அவர்களின் அன்றைய நிலை, ஆச்சாரியார் கொண்டுவந்த கடன் நிவாரணச் சட்டத்திற்கு அடிப்படையாக அமைந்தது.

பொதுவாகவே இந்த நாட்டில், விவசாயம் ஒரு இலாபகரமான தொழிலாக இருக்கவில்லை என்று பலர் குறைபட்டுக் கொண்டிருக்கின்றனர் — அதற்கான பல காரணங்களை எடுத்துக்காட்டி! அப்படிப்பட்ட ஒரு தொழிலில் தேவைக்கு அதிகமானோர் வேறு ஈடுபட்டு, கிடைக்கும் சொற்பப் பலனைப் பகிர்ந்து கொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றனர்.

அந்த நிலையில், விவசாயிகளில் சிலரிலேனும் தங்களுக்கென இருக்கும் ஒரு சிறுதுண்டு நிலத்தையும் கடன் ஏதும் பெறாமல் பயிரிட முடிவதில்லை. காரணம், சென்ற ஆண்டில் அந்த நிலத்தில் தாங்கள் பாடுபட்டதினால் கிடைத்த பலனில் ஏற்கனவே மூலதனச் செலவுக்காக வாங்கிய கடனை வட்டியுடன் திருப்பித் தந்துவிட்ட பிறகு, எஞ்சியது, தங்கள் குடும்பத்தாரின் இன்றியமையாதத் தேவைகளுக்கே போதுமானதாயிருக்கவில்லை; கால் வயிறும், அரைப்பட்டினியுமாகக் காலத்தை ஓட்ட வேண்டியிருந்தது; அப்படியிருக்க, புதிய ஆண்டில், தங்களின் சிறு நிலத்தையும் பயிரிட உழவுக் கூலி, உரம், விதை முதலிய மூலதனச் செலவுகளுக்கு அவர்களிடம் பணம் ஏது? கடன் வாங்கினாலன்றி, அவர்களுக்கிருக்கும், 'கைஅளவு' மண்ணில், அடுத்த ஆண்டுக்கான 'கஞ்சிக் கலயத்தை' உருவாக்கிவிட முடியாது.

அதிலும், எதிர்பார்க்கிறபடி வானம் பொய்க்காமல், பயிர்கள் பூச்சிகளுக்கு இரையாகாமல் இருந்தால்தான், இந்த நிலைகூட! இன்றேல், 'கடன் வாங்கிப் பயிர் செய்தேன் — பலன் ஏதும் பெறவில்லை; கடனை எப்படித் திருப்பித்தருவேன்?' என்ற எண்ணம் விவசாயிகளை அச்சுறுத்தும், கடன் கொடுத்தவர்களோ குறித்த கெடுவில் கடனைத் திருப்பித் தராவிட்டால் 'கெடுபிடிப் போர்' நடத்துவர்.

விவசாயிகள் இவ்விதம் கஷ்டப்படுவதைத் தவிர்க்கத்தான், 'சர்க்காரே விவசாயிகளுக்குக் கூட்டுறவு முறையில் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்து உதவவேண்டும்,' என்று, விவசாயிகள் சார்பில் பலதரப்பினரும் கோரினர்,

சர்க்காரும், 'விவசாயிகளுக்கு நாங்கள் உதவப்போகிறோம்; கிராமப் பாங்கிகளைத் திறக்கப் போகிறோம்,' என்று கூறினர்.

அவர்கள் உதவி செய்கிற 'இலட்சணம்' எப்படி இருக்கிறது — கிராமப் பாங்கிகள் எப்படிக் கடன் தருகின்றன — என்பதை, கூட்டுறவு இலாகா அதிகாரி குறிப்பிட்டிருப்பதைத் துவக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.

அதிகாரி நிலையிலிருப்பவரே, 'வாங்கப்படும் வட்டி மிக அதிகமானது,' என்று கூறுகிறார்.

'கிராமங்களில், தனிப்பட்டவர்களிடம் கிடைக்கும் கடனுக்கு விதிக்கப்படும் வட்டிகூட, இவ்வளவு அதிகமானதல்ல,' என்று பல விவசாயிகள் கருதுகின்றனர்.

'கூட்டுறவு முறைப்படி நடைபெறும் பாங்கிகள் இந்த அவல நிலையைக் கைக்கொண்டிருந்தால், கிராம மக்களுக்குக் கூட்டுறவு முறைமீது ஒருவகை வெறுப்புத் தோன்றக் கூடும்; கூட்டுறவு இயக்கத்தின் எதிர்கால வளர்ச்சி பாதிக்கப்படும்,' என்பதை எல்லாம் மனதில் கொண்டுதான், கூட்டுறவு ரிஜிஸ்திரார் அவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார் என நாம் எண்ணுகிறோம்.

அவர் அதிகாரியாயிருப்பதால், இந்த அவலத்தின் பின்விளைவுகள் பற்றிக் கூறாது விடுத்திருக்கக் கூடும் எனவும் நினைக்கிறோம்.

எனவே, சர்க்கார், 'உதவுகிறோம்' என்ற பெயரில் உழவர்களுக்கு இழைத்து வரும் இந்தத் 'தொல்லை' பற்றி ஆராய்ந்து, ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும் என்று எடுத்துக் கூறுகிறோம்.

வட நாடு வாழ வகை வகையான திட்டங்கள்!

சர்க்கார் உத்தியோகங்களுக்கு பட்டங்கள் தேவையே

நாகபுரி பல்கலைக்கழக முடிவு

சர்க்கார் உத்தியோகங்களுக்கு நபர்கள் பொறுக்குவதில், பல்கலைக் கழகப் பட்டத்தை ஒரு தகுதியாகக் கோருவதை விட்டொழிக்கும் எந்த ஒரு முயற்சியையும் தாங்கள் எதிர்ப்பதாக நாகபுரி பல்கலைக் கழகம் கருத்தறிவித்திருக்கிறது

"இப்போதிருக்கிற கௌரவம் பல்கலைக் கழக பட்டத்திற்குத் தொடர்ந்து இருக்க வேண்டும். இப்போதைய நிலையைத் தளர்த்துவது தேவையற்றது, விரும்பத் தகாதது."

மத்திய அரசாங்கம் வெளியிட்டிருந்த கேள்விப் பட்டியலை தீர்க்கமாக விவாதித்த பின்னர், நாகபுரி பல்கலைக் கழக நிர்வாகக் குழு இந்த முடிவை மேற்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பல்கலைக் கழகப் பட்டங்கள், சர்க்கார் உத்தியோகங்களுக்கு வருபவர்கள் பெற்றிருப்பது எவ்வளவு தூரம் தேவையானது — எந்த அளவு வரை தேவையானது என்பனபோன்ற பிரச்சினைகளை ஆராய்வதற்காக மத்திய அரசாங்கம் ஏ. இராமசாமி முதலியார் தலைமையில் ஒரு குழு நியமித்திருக்கிறது.

வரும் ஆகஸ்டு 31-ந் தேதிக்குள், குழு, தனது அறிக்கையை தாக்கல் செய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நகரசபைத் திட்டங்கள்

நிறைவேற்ற சர்க்காரிடம் கடன் கோர முடிவு

சென்னை நகர சபையின் பல திட்டங்களை நிறைவேற்றுவதற்காகச் சென்னை சர்க்காரிடம் ரூ 25,49,000 கடன் கேட்பதென்று சென்னை நகர சபையின் 8 விசேடக் கூட்டங்களின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்.

ஷெனாய் நகர் அமைப்புத் திட்டத்தை அமுல் நடத்துவது, தண்டையார்பேட்டை பகுதி நகர் அமைப்பிற்காக நில ஆர்ஜிதம் செய்வது, சுடுகாட்டிற்கான நிலம் வாங்குவது, புகை போக்கிகளுடன் கூடிய பிணம் எரிக்கும் கொட்டகைகள் போடுவது, நகரப் பகுதியிலும் நகரின் சில பாகங்களிலும் பொதுக் கக்கூசுகள் கட்டுவது, குப்பை கூளங்கள் ஏற்றிச் செல்லும் மோட்டார் லாரி வாங்குவது, நகர சபைக் குடியிருப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், இராயபுரம், நேப்பியர் பூங்கா ஆகிய இடங்களுக்கு அருகில் உள்ள சாக்கடை நீர் இறைப்பு நிலையங்களுக்கு மின்சார வசதி செய்து தருவது — ஆகிய இத்திட்டங்களனைத்தையும் அமுல் நடத்துவதற்கென்றே மேற் கூறப்பட்ட கடன் தொகை கேட்பதென்று முடிவு செய்யப்பட்டுள்ளதாம்

இத்தொகையில், சில தண்ணீர் அபிவிருத்தி திட்டங்களுக்கு ரூ 875 லட்சமும், தண்ணீர் ஆராய்ச்சிக் கூடத்திற்கு முதல் மாடி கட்டுவதற்கு ரூ. 24,000-மும் செலவிடுவதெனவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்.

வங்கத்தில் எண்ணெய் கிடைக்கிறதாம்!

ஸ்டான்வாக் — இந்தியப் பேரரசு கூட்டுத் தொழில் உடன்பாடு

★

புதுடில்லி, ஜூன் 28—

வங்காள பூமிக்கடியில் எண்ணெய் இருப்பதாக ஸ்டாண்டர்ட் வாக்குவம் ஆயில் கம்பெனி நடத்திய பரீட்சையிலிருந்து தெரிய வருகிறது.

மறைந்து கிடக்கும் எண்ணெயைப் பண்படுத்திப் பயனுள்ளதாக்க இந்தியப் பேரரசும், ஸ்டான்வாக் கம்பெனியும் ஒரு தொழில் உடன்பாட்டிற்கு வந்து இருக்கிறது.

75 : 25 என்ற முறையில், ஸ்டான்வாக் கம்பெனியும்—இந்தியப் பேரரசும் முதலீட்டில் பங்கு கொள்ள முடிவாகி இருக்கிறது.

மறைந்துகிடக்கும் எண்ணெயை வெளிக்குக் கொண்டுவரும் தொழில் முயற்சிக்கு ஸ்டான்வாக் கம்பெனி, இந்தியப் பேரரசிடம் அனுமதி கோரி இருக்கிறது.

★

மத்தியப் பிரதேசத்திற்கு மற்றொரு தொழில் அமைப்பு!

செயற்கை எண்ணெய் உற்பத்திக்கு ஏற்பாடு

நாகபுரி, ஜூன் 29—

பிலாஸ்பூர் மாவட்டத்திலிருக்கும் கோர்பா அருகில், செயற்கை எண்ணெய் உற்பத்தி செய்வதற்கானதொரு தொழிற்சாலையை நிறுவ, இந்தியப் பேரரசு தீவிரமாக முயற்சித்துக்கொண்டிருக்கிறது.

இதற்கான தொழில் திட்டமொன்றைக் கொடுக்குமாறு, மூன்று வெளி நாட்டுத் தொழில் நிலையங்களை, இந்தியப் பேரரசு வேண்டிக் கொண்டு இருக்கிறது.

மேற்படி தொழில் நிலையங்கள் தங்கள் கருத்தை திட்ட உருவில், வரும் அக்டோபர் மாதத்திற்குள், இந்தியப் பேரரசிடம் கொடுக்கக்கூடும் என நம்பப்படுகிறது.

★

உத்திர பிரதேசத்திற்கு யோகத்திற்குமேல்யோகம்

அணு ஆராய்ச்சி நிலையத்திற்கு ஏற்பாடு

லக்னோ, ஜூன் 28—

சூபெர் மன்ஜில் என்ற இடத்தில், புதிதாக ஒரு அணு ஆராய்ச்சிக்கூடத்தை நிர்மாணிக்க இந்தியப்பேரரசு முடிவுக்கு வந்திருக்கிறது.

அங்குதான் மத்திய மருந்து ஆராய்ச்சிக்கூடம் தொழில் பட்டு வருகிறது.

புதிதாக நிறுவப்பட இருக்கும் அணு ஆராய்ச்சிக் கூடத்தில், இந்தியாவின் தலை சிறந்த விஞ்ஞானிகள், அணு பற்றிய விரிவான ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருவர்.

ஐந்து அணு ஆராய்ச்சிக் கூடங்களை நிர்மாணிப்பது என்ற இந்தியப் பேரரசின் முடிவுப்படி, முதல் ஆராய்ச்சிக் கூடம் உத்திர பிரதேசத்தில் நிறுவப்பட இருக்கிறது!

மனிதவர்க்கமே அழிந்து விடுமாம்!

அணுகுண்டு சோதனைகள் பற்றிய மேல் விபரங்கள்

"வெகு தூரத்திலுள்ள பாலைவனப் பிரதேசங்களில் அணுகுண்டுப் பரிசோதனை நடத்தினால்கூட மனித வர்க்கமே அடியோடு அழிந்துவிடக் கூடும்,"

என்று பாரம்பரிய நூல், பிராணி நூல் நிபுணரான டாக்டர் பில்கிங்டன் என்பவர், லண்டனில் கூறியிருக்கிறார்.

துரிதமாகப் பல சந்ததிகளைத் தோற்றுவிக்கும் சிலவகையான ஈக்களை கதிரியக்கச்சோதனைக்கு உட்படுத்தித் தாம் சோதனை செய்ததாகவும், அதுபோது அந்த ஈக்களின் முதல் இரண்டு தலைமுறைகளில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை என்றும், ஆனால் மூன்றாவது தலைமுறையிலிருந்து தோன்றிய ஈக்களுக்கு பரம்பரையாகக் கட்டிகளும், உறுப்புகள் இல்லாமலும், கண்களில் கோளாறுகளும ஏற்பட்டிருந்தன என்றும், அதற்கும் பின்னர் உள்ள தலைமுறையைச் சேர்ந்த ஈக்களின் உறுப்பில்லாமைத் தன்மை அதிகரித்து, இறுதியில் முட்டையே பொரிக்கப்படாமல் இருந்தது என்றும் தாம் கண்டுபிடித்ததாகக் கூறியிருக்கிறார்.

இவற்றை வெளியிட்ட அவர், 'எனவே, ஒவ்வொரு அணுகுண்டு, நீரவளிக்குண்டு சோதனையின் விளைவாக மனித வர்க்கத்திற்குச் சாவுநாச அபாயம் அதிகரித்துக் கொண்டே வரும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பம்பாய் சர்க்காரின் செயல் திறம்?

பாட புத்தகங்கள் கிடைக்காது தவிப்பு

பள்ளிகளில் வேலை நின்றுவிட்டதாம்!

"பம்பாய் நகரில், பள்ளிகளுக்குத் தேவையான பாடப் புத்தகங்கள் கிடைக்காமையினால், பள்ளிகளில் வேலைகள் நிலை நின்றுவிட்டன;

"பல பள்ளிகளில் மாணவர்களுக்கு, ஆசிரியர்கள் கதை சொல்லிக்கொண்டிருக்கின்றனர்;

"சில வகுப்புகளில் சுலப கணிதம் தவிர வேறெந்தப் பாடமும் நடத்தப்படவில்லை;

"மாநில சர்க்காரின் கல்வி இலாகா நடத்தும், கல்விக்கு எதிரான பரிசோதனைகளின் விளைவாக மாணவரும், பெற்றோரும், ஆசிரியர்களும் பெரும் அசௌகரியத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றனர்,"

—என்று, பம்பாய் நகரசபையின் சிறப்புக் கூட்டமொன்றில் பேராசிரியர் ராம் ஜோஷி என்பவர் பேசியிருக்கிறார்.

பாடப் புத்தகங்கள் கிடைக்காதது பற்றிக் கவலை தெரிவித்தும், ஆயிரக்கணக்கான ஆரம்ப—இடைநிலைப் பள்ளிகளுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியத்தைப் போக்க சர்க்காரைக்கேட்டுக்கொண்டும் ஜோஷி ஒரு தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்.

அத்தீர்மானத்தை காங்கிரஸ்காரரான மகாசபதே என்பவர் ஆதரித்திருக்கிறார்.

"சில நாட்களுக்கு முன்புவரை, 'பாட புத்தகங்கள் குறித்த காலத்தில் கிடைக்கும்—மாணவர்களுக்கு எந்தவிதத் தொல்லையும் இருக்காது,' என்று கல்வி மந்திரி கூறி வந்திருக்கிறார்

"பதினைந்து நாட்களுக்கு முன்பாகவே ஆசிரியர்களுக்கும், பெற்றோருக்கும் நன்றாகத் தெரிந்தது—'புத்தகங்கள் ஜூன் இறுதியில் கூட கிடைக்க முடியாது'—என்று! அதை அவர்கள் அவ்வப்போது தெரிவித்தும் வந்திருக்கின்றனர். பொது மக்களின் கருத்தை மந்திரி அறிந்திருந்தால், அவர் இந்த விஷயத்தில் அவ்விதம் கூறியிருக்கமாட்டார்.

"1953 டிசம்பரில், சர்க்கார், பாட புத்தகங்கள் எல்லாம் திருத்தி அமைக்கப்படும் என்றும், புதிய புத்தகங்கள் தேர்ந்தெடுக்கப்படும் என்றும் அறிவித்தனர்; புத்தகம் வெளியிடுவோர் 1954 டிசம்பருக்குள் தங்கள் புத்தகங்களை அங்கிகாரத்திற்காக அனுப்பிவிட வேண்டுமென உத்திரவிடப்பட்டனர்.

ஒன்று முதல் நான்காம் வகுப்பு வரை உள்ள வகுப்பு புத்தகங்களை வெளியிடும் உரிமை சர்க்காருக்கே ஏக போகமாயிருந்தது.

பின்னர், புத்தகம் வெளியிடுவோர், அக்டோபர் மாதத்திற்குப் பிறகும் காலம் வளர வேண்டினர்; 15 நாள் தரப்பட்டது; பலர், புத்தகங்களை, சர்க்காரின் அங்கீகாரத்திற்கென அனுப்பி வைத்தனர்.

"பாடப் புத்தகத் தனிக் குழு, பிப்ரவரித் திங்களிலேயே தங்கள் சிபாரிசுகளை அனுப்பியிருந்தும் கூட, 1955 ஏப்ரல் திங்கள் வரை அங்கீகாரம் அளிக்கப்படவில்லை.

"1955 ஏப்ரல் 16-ல், சர்க்கார் வெளியிட்ட அங்கீகாரப் பட்டியல் 7-ம் வகுப்புக்கு மட்டும்தான் இருந்தது; இதர வகுப்புப் புத்தகங்கள் அங்கீகாரம் பற்றிய தகவல் இல்லை

'எத்தனை புத்தகங்கள் வேண்டும்—புத்தகங்களின் விலை என்னவாயிருக்க வேண்டும்—என்பது பற்றிய தகவல்களே குறிப்பிடாத 'மொட்டை'யான பட்டியலை சர்க்கார் வெளியிட்டனர்.

"அங்கீகரிக்கப்படாத புத்தகங்கள் பற்றி அப்பீல் செய்துகொள்ளலாம் என்றும், அதனை விசாரிக்க 'அப்பீல்' குழு நியமிக்கப்பட்டதென்றும், 131 மனுக்கள் வந்தன என்றும், அவை என்னவாயின என்று இன்றுவரை தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது.

"மே திங்கள் இறுதியில் புத்தகம் வெளியிடுவோர் இராப்பகலாக உழைத்தும் பாடப்புத்தகத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதிருக்கின்றனர்."

இந்தத் தகவல்களை எல்லாம் கண்டனத் தீர்மானத்தின் மீது பேசிய ஜோஷி வெளியிட்டிருக்கிறார்.

★

நல்லுறவினால் ஏற்பட்ட நன்மை!

கோட்டயம், ஜூன் 29—

திருவிதாங்கூர் சிமெண்ட்ஸ் லிமிடெட் கம்பெனியில் வேலை செய்யும் 480 தொழிலாளர்கட்கு இரண்டுமாத போனஸ் தனிப்பட்ட முறையில் தரப்படுமென மேற்படி கம்பெனி மானேஜிங் ஏஜெண்டுகள் அறிவித்திருக்கிறார்களாம்! இதனால் மானேஜிங் ஏஜெண்டுகளுக்கு ரூ. 75,000 செலவாகுமென்று கூறப்படுகிறது.

சென்ற 3 ஆண்டுகளாக அக்கம்பெனி தொழிலாளர்கட்கும்—முதலாளிகட்கும் இடையே எந்தவிதமான தகராறுமில்லாமல் நல்லுறவு இருந்து வந்ததின் காரணமாக 'விசேட' போனசாக இத்தொகை அளிக்கப்படுகிறதாக கம்பெனியின் ஜெனரல் மானேஜர் அறிவித்திருக்கிறார்.

'பதவியை விட்டு கல்வி மந்திரி விலக வேண்டும்'

பம்பாய் நகர பள்ளி மாணவர்கள் குரல்

நகரில் உள்ள பல பள்ளிகளையும் சேர்ந்த சுமார் 75 மாணவர்கள், நகரசபை அலுவலகத்தின் முன்பு கூடி, கல்வி மந்திரி உடனடியாக தனது பதவியை ராஜினமாச் செய்யவேண்டுமெனக் கோரி, குரல் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர்.

மாணவர்கள், தங்களுக்குப் பாட புத்தகங்கள், பள்ளிக்கூடம் திறந்து பல நாளாகியும் கிடைக்கவில்லை என்று குறைபட்டுக்கொண்டதுடன், துவக்கப்பள்ளிகளில் மட்டுமின்றி இடைநிலைப் பள்ளிகளிலும், மாணவர்களிடமிருந்து வாங்கப்படும் சம்பளம் வெகுவாகக் குறைக்கப்பட வேண்டும் என்று கோரினர்.

நகரசபைத் தலைவரான என். சி. பூபாலா என்பவரிடம் மாணவர் பிரதிநிதிகள், மனு ஒன்றைத் தந்திருக்கின்றனர் அவரும் கோரிக்கைகளைக் கவனிப்பதாகக் கூறியிருக்கிறார்.

பக்கிங்காம் கால்வாய் அபிவிருத்தி

சென்னை சர்க்கார் பரிசீலனை

ஆந்திரா, சென்னை ஆகிய இரு மாநிலங்களிலுமுள்ள முக்கியமான கால்வாய்களுள் ஒன்றான பக்கிங்காம் கால்வாயை அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகளைப் பற்றி சென்னை சர்க்கார் விரைவிலேயே பரிசீலனை செய்யுமென்று தெரிகிறது.

சோழ மண்டலக் கரையின் ஓரத்திற்கு சுமார் ¼ மைல் தூரத்திற்குள்ளாகவே ஓடிக்கொண்டிருக்கும் இக்கால்வாய், சென்னை நகரின் வழியாகப் போகிறது; மற்றுமுள்ள இடங்களில் பல உப்பங்கழிகள் வழியாகவும் பாய்கிறது. நதிகளின் முகத்துவாரங்களிலும், மற்றும் கடலுட்புகும் கழிமுகங்களிலும் பக்கிங்காம் கால்வாய்க்கு கடல் பொங்கும் நாட்களில் நீர் பாய்கிறது.

சென்னைக்கு வடபாகத்தில் இக்கால்வாயின் நீளம் 196 மைலாகும் இதில் 36 மைல் தூரம் சென்னை மாநிலத்திலேயே இருக்கிறது சென்னைக்குத் தெற்கில் மீண்டும் 64 மைல் தூரம் வரையிலும் பக்கிங்காம் கால்வாய் ஓடுகிறது.

இந்தக் கால்வாய்க்குப் பல கால்வாய்களுடன் தொடர்பு இருப்பதால் மொத்தம் 400 மைல் நீளத்திற்குக் கடலோரமாகவே கால்வாய்ப் போக்குவரத்து வசதி அமைந்திருக்கிறது. வடக்கில் காக்கிநாடா துறைமுகத்திலும், தெற்கில் சென்னை துறைமுகத்திலும் இக்கால்வாய்க்கு இணைப்புக்கான இடம் இருக்கிறது.

இக்கால்வாயில், படகுகள் மூலமாக அரிசி, தானியங்கள், மீன், உப்பு, விறகு, சுண்ணாம்பு, கிளிஞ்சல், மரங்கள் முதலிய ஏராளமான சாமான்கள் போக்குவரத்து நடைபெறுகின்றன. ஒவ்வொரு படகும் அதிக பட்சம் 31 டன் சரக்குகளை ஏற்றிச் செல்கின்றன.

'சமய நூல்களில் கட்டுக்கதைகள் மலிந்துகிடக்கின்றன'

'தமிழர் உழைப்பால் எழும்பிய கோயிலில் தமிழில் வழிபாடு ஏன் இல்லை?'

டாக்டர் இராசமாணிக்கனார் கேள்வி

திருச்சி, ஜூன் 29—

"சமய நூல்கள் என்று சொல்லப்படுபவவற்றுள் இருக்கும் சமயக் கட்டுக்கதைகள் சமயச் சொற்பொழிவுகளிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்; அருவருக்கத்தக்க ஆபாசக் கதைகள், இயற்கை நிகழ்ச்சிக்கு மாறுபட்ட செய்திகள், இவற்றைப் பிரசாரம் செய்தல் கண்டிப்பாக நீக்கப்படுதல் வேண்டும்; இந்தக் கற்பனைகளே சைவ சமயத்தை பாழ்படுத்துவன; தம்மை தலைகுனியச் செய்வன; இன்றுள்ள சமய எதிர்ப்புக்கெல்லாம் காரணம் இக்கட்டுக்கதைகளே என்பதை நன்குணர்தல் வேண்டும்,"

—என்று, மதுரை தியாகராசர் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் மா. இராசமாணிக்கனார், திருசிரபுரம் சைவ சித்தாந்த சபை ஆண்டு விழாவிற்குத் தலைமையேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"தமிழ் நாட்டு மன்னரால்-தமிழ் மக்கள் உழைப்பால் கட்டப்பட்ட கோவில்களில், அம்மக்கள், தாய்மொழியில்—தமிழில் வழிபாடு இல்லை என்பதை வெட்கத்தோடு கூறவேண்டுபவராக இருக்கின்றோம். தமிழ் மக்களுக்குப் புரியாத வேற்று மொழியில் வழிபாடு நடைபெறுகிறது அங்கும், சில ஆண்டுகட்கு முன்பு வரை சாதி வேறுபாடுகள் தலைவிரித்து ஆடின அல்லவா? இந்நிலையில் சைவம் எங்ஙனம் வளர முடியும்? மக்களுக்கு எவ்வாறு சமயப்பற்று உண்டாகும்?

"கோவிலைக் கண்காணிக்கும் பலரும்கோவிலைப்பற்றியோ, சமயத்தைப் பற்றியோ ஒன்றும் அறிந்தவராக இல்லை. சமயத்தைப் பற்றியோ, சித்தாந்த சாஸ்திரங்களைப் பற்றியோ பெருமுழக்கமிட்டுப் பேசுவோர் பலரும் மக்களுக்குப் புரியும் வழியில்—சமயம் என்றால் என்ன, சமயத்திற்கும் வாழ்க்கைக்கும் என்ன தொடர்பு, மனிதன் எவ்வாறு சமய வாழ்வு வாழ்தல் வேண்டும்—என்பதைத் தெளிவாகப் பேசாமல், 'சமயக் கட்டுக் கதைகளைப் பேசி, மக்களின் அறிவைப் பாழாக்குகின்றனர். இத்தகைய கே[illegible]ள் பல; இக் கேடுகளை [illegible]த் கொண்டு, 'சமயம் வளரவில்லை — நாத்திகம் பெருத்துவிட்டது' என்று அமைச்சர் முதல் ஆண்டி ஈறாக, இப்பொழுது சமயமேடைகளில் பேசுவோர் அனைவரும் ஓலமிட்டு வருகின்றனர்.

"சைவம் செல்வாக்கோடு விளங்கியபோது வைணவத்தோடு மாறுபட்டது; அதனை அடக்கவும், பகைக்கவும் முயன்றது; அத்துடன், சைவ மக்களை ஒற்றுமைப் படுத்தத் தவறிவிட்டது; சைவ சமயத்தார் பல நூறு சாதிகளாகப் பிரிந்திருந்தனர்; 'இன்ன வகுப்பார் காலில் செருப்பணிதல் கூடாது; இன்ன வகுப்பார் மாடி வீடு கட்டக் கூடாது; இன்னின்ன வகுப்பார் கோவிலுக்குள் வரக் கூடாது,' என்றெல்லாம் கண்டிப்பான வரையறைகள் இருந்தன. இவைகளில், மக்கள், மன நிம்மதியின்றி, புண்பட்ட நெஞ்சுடன், அரசன் ஆணைக்கு அஞ்சி வாழ்ந்து வந்தனர்."

தூங்கிவழியும் சர்க்கார் அலுவலகங்கள்: தட்டி எழுப்ப முயற்சி!

திரு—கொச்சி முதன் மந்திரி வருத்தம்

சர்க்கார் தலைமை அலுவலகங்களிலும், இதர இலாகா அலுவலகங்களிலும் காரியங்கள் நிறைவேற்றுவதில் ஏற்படும் கால தாமதத்தைக் குறைக்கவும், அங்கு தாண்டவமாடும் இலஞ்சப் பழக்கத்தை ஒழிக்கவுமாக 'கண்காணிப்பு இலாகா' என்று ஒரு புதிய இலாகா ஏற்படுத்தப்பட்டிருப்பதாக திரு—கொச்சி முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்த மேனன் குறிப்பிட்டிருக்கிறார்.

தான் சர்க்கார் அலுவலக தஸ்தாவேஜுகள் பலவற்றைப் புரட்டிப் பார்த்தபோது, எவருமே, 'சர்க்கார் அலுவல்களில் துரிதமான பைசல் காணவேண்டும்' என்ற நோக்கங்கொண்டவர்களாயிருக்கவில்லை என்பதை உணர்ந்ததாகவும் அதன் பேரிலேயே புதிய இலாகா ஏற்படுத்தப்பட்டிருப்பதாயும் அவர் தெரிவித்திருக்கிறார்.

"மக்களின் நலன்களைப் பாதிக்கக்கூடிய பிரச்சினைகள் அடங்கிய தஸ்தாவேஜுகள் மறக்கப்பட்டுவிடுகின்றன. மந்திரிகளும் செயலாளர்களும், கேள்வி மேல் கேள்விகளாக பிரச்சினைகள் பற்றிக் கேட்டிருக்கிறார்கள்; ஆனால், என்னவோ, ஒருவித முடிவும் மேற்கொள்ளப்பட்டதாகக் காணோம். இந்த நிலைமை மாற வேண்டுமென நான் விரும்புகிறேன்."

★

அமெரிக்கப் பருத்தி வாங்க 66,75,000 டாலர்

இந்திய சர்க்காருக்கு அமெரிக்க உதவி

அமெரிக்காவில் செட்டிமைப் பருத்தி வாங்குவதற்கென இந்தியாவுக்கு அமெரிக்க சர்க்கார் 66,75,000 டாலர் உதவித் தொகையாக ஒதுக்கியிருக்கிறதாம்.

வருகிற ஜூலை—அக்டோபர் வரையில் இதற்கான ஒப்பந்தங்களைச் செய்துகொண்ட பின்னர், ஆகஸ்டு முதல் டிசம்பர் வரையிலும் அவ்வொப்பந்தங்களின்படி 'டெலிவரி'களைப் பெறலாமாம்.

பச்சிளம் குழந்தைகளுக்கு!

பதப்படுத்தப்பட்ட பால் வழங்க பம்பாய் நகரசபை முடிவு

பம்பாயிலுள்ள நகர சபை இலவசப் பால் விநியோக நிலையங்களில் வருகிற ஞாயிறு முதல் அதற்குப் பின்னர் வரும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் காலை 8 மணி முதல் 10 மணி வரை 12 வயதுக்குட்பட்ட எல்லா குழந்தைகளுக்கும், தலா 8 அவுன்ஸ் பதப்படுத்தப்பட்ட பால் விநியோகிக்கப்படுமாம்; கொடுக்கப்படுகின்ற இந்தப் பாலை, குழந்தைகள், அங்கேயே முழுமையுமாகக் குடித்து விட வேண்டுமென்றும், குழந்தைகளுக்கு அத்தாட்சிப்பத்திரங்களோ, அடையாளச் சீட்டுகளோ தேவையில்லை என்றும் கூறப்படுகிறது.

இதுபோன்ற 15 நிலையங்கள் விசால பம்பாயில், ஏழை குடி மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் வருகிற ஜூலை 3-ந் தேதிக்குள் திறக்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இத்திட்டம் வெற்றி பெறுமானால், மேலும் இவைபோன்ற 100-நிலையங்கள் பின்னர் திறக்கப்படுமென்றும், இதனால் சுமார் 1½-லட்சம் குழந்தைகள் பயனடைவர் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடமை மறந்து இலஞ்சம் வாங்கிய உயர்தர அதிகாரிகள்

தாற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கம்

திரு—கொச்சி சர்க்கார் நடவடிக்கை

திருவனந்தபுரம், ஜூன் 27—

பாடபுத்தகங்கள் விநியோகிப்பதில் கடமை மறந்ததற்காகவும், மர ஏல பேரத்தில் இலஞ்சம் வாங்கியதாகவும் குற்றம் சாட்டப்பட்டு, திரு—கொச்சி அரசாங்க உயர்தர அதிகாரிகள் நால்வர் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

அதே நேரத்தில் மாநில சர்க்கார், அவர்கள் புரிந்துள்ள குற்றங்கள் பற்றி விசாரணை நடத்த உத்தரவிட்டிருப்பதாயும் தெரிகிறது.

அந்தப் புலன் விசாரணை வேலையை புதியதாகத் துவக்கப்பட்டுள்ள இலாகா மேற்கொள்ளும் என்று தெரியவருகிறது.

பாடப்புத்தகத்திற்கான தனி அதிகாரி நாராயணன் நாயர் மற்றும் சர்க்கார் அச்சகங்களின் நிர்வாகியான கோபாலமேனன் ஆகியோர் குறிப்பிட்ட காலத்தில் புத்தகங்களைத் தயாரித்துத் தருவிலவதாக அறுதியிட்டு உறுதிமொழிகள் தந்திருந்தும், அவ்வாறு தராமையினால், தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கிவைக்கப்பட உத்தரவிடப்பட்டிருக்கின்றனராம்.

இந்த இருவரும் தங்கள் கடமைகளைச் சரிவர உணரவில்லை என்பதற்குப் போதுமான ஆதாரங்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

மனைவியைக் கொன்ற இந்திய டாக்டர்

தூக்கிலிடப்பட்டதாக தகவல்

ஜார்ஜ்டவுன், ஜூன் 29—

தமது மேரந்த மனைவியைக் கொலை செய்த குற்றத்திற்காக டிரினிடாட்டைச் சேர்ந்த இந்திய டாக்டரான தலீப்சிங் என்பவர் தூக்கிலிடப்பட்டார் என்று பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

அவரது மனைவியார் ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்தவர் என்றும், அவருக்கு 28 வயதாகிறது என்றும் தெரிகிறது.

திருமதி சிங் இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன்பு ஜெர்மனியிலிருந்து ஓடிவந்து எடின்பர்சில் டாக்டர் வேலைக்குப் படித்துக் கொண்டிருந்தாராம். அப்போதுதான் திரு. தலீப்சிங்கையும் அவர் சந்தித்திருக்கிறார்.

பின்னர் சென்ற ஆண்டு ஏப்ரல் 6-8 ஆகிய மூன்று நாட்களுக்கிடையே அவர் கொலை செய்யப்பட்டு, அவரது பிரேதம் ஏப்ரல் 10-ந் தேதியன்று அட்லாண்டிக் கடற்கரையில் ஒதுக்கப்பட்டுக் கிடந்தது.

இக்கொலை நிகழ்ச்சியை அடுத்து, 3 திங்கள் கழித்து ஜூலை திங்கள் 18-ந் தேதி அவரது கணவரான டாக்டர் தலீப்சிங் கைது செய்யப்பட்டார். விசாரணைகள் நடைபெற்று முடிந்த பின்னர், சென்ற டிசம்பர் திங்கள் 3-ந்தேதி அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

தமக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை எதிர்த்து தலீப்சிங் செய்துகொண்ட மனுவை டிரினிடாட் அப்பீல் கோர்ட்டும், பிரிவி கவுன்சிலும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டன.

மனு நிராகரிக்கப்பட்டதும், தம்முடைய மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகவாவது குறைக்கவேண்டுமென்ற அவரது கோரிக்கையையும் டிரினிடாட் நிர்வாகக் குழு நிராகரித்துவிடவே இத்திங்கள் 28-ந் தேதி தூக்கிலிடப்பட்டார்.

போலீஸ் நிலையத்தில் நிலப்பிரபு மரணம்?

ஜெய்ப்பூர், ஜூன் 29—

இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள நிலப்பிரபுக்கள் சங்க உறுப்பினர் ஒருவரான நந்தா சிங் என்பவர், ஜெய்ப்பூர் போலீஸ் நிலையத்தில் மரணமுற்றிருக்கிறார்.

கடந்த ஒரு மாத காலமாக இந்த மாநிலத்தில் நடைபெற்றுவரும் நிலச்சுவான்கள் கிளர்ச்சியையொட்டி, அவர் இறப்பதற்கு முந்திய தினம்தான் போலீசாரால் கைது செய்யப்பட்டு போலீஸ் நிலையத்தில் காவல் வைக்கப்பட்டார்.

அவர், இருதய நோய் காரணமாக மரணமுற்றார் என்று, அவரைப் பரிசோதித்த மாவட்ட அதிகாரிகள் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

ஆனால் நிலச்சுவான்கள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலோ 'நந்தா சிங், போலீசாரால் அடித்துக் கொல்லப்பட்டார்' என்று கூறப்பட்டிருக்கிறது.

கடமை மறந்து......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதாகவும் சர்க்கார் அறிவிப்பு கூறுகிறது.

மாவட்ட காட்டிலாகா அதிகாரி நாராயண மூர்த்தி, மற்றும் வட்டார அதிகாரி கே. ஜஸ்டஸ் ஆகியோர் வேலையிலிருந்து நீக்கப்பட்ட மற்ற இருவராவர்.

கடந்த மார்ச் 27-ந் தேதியன்று பீர்மேடு அருகில் உள்ள அப்பன் கோவில் கிடங்கில் நடைபெற்ற மர ஏலத்தில் இவர்கள் இலஞ்சம் வாங்கினர்கள் என்பதை நிரூபிக்கும் வகையில், பல ஒழுங்கீனங்கள் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாக சர்க்கார் பத்திரிகைக் குறிப்புக் கூறுகிறதாம்.

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் கோவை வருகை

வரவேற்பு—பாநில மாநாட்டு நிதியளிப்புக் கூட்டம்

★

"3-7-55 அன்று, கோவை நகருக்கு, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வருகை தருகிறார்கள். கோவை மாவட்டக் கழகத்தின் சார்பிலும், கோவை நகரக் கிளையின் சார்பிலும் பொதுச்செயலாளருக்கு மகத்தானதோர் வரவேற்பளிக்கப்பட இருக்கிறது.

"காலை 10 மணிக்கு, கோவை நகர தி. மு. கழகக் கட்டிடத்தில் (சுக்கிரவாரப்பேட்டை) பொதுச்செயலாளர் முன்னிலையில், கோவை மாவட்டத்தில் உள்ள அத்தனை கிளைக் கழகச் செயலாளர்களும, மாவட்டக் கழக உறுப்பினர்களும் கொண்ட ஒரு ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். அந்தக் கூட்டத்தில்,மாவட்டத்தின் கழக வளர்ச்சி குறித்தும், பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்படும்.

"கிளைக் கழகத் தோழர்கள் தங்களூர்க் கிளையின் சார்பாக, தங்களூரின் பெயரையும், அதன் கீழ் தி. மு. க. என்னும் எழுத்துக்களையும் பொறித்த கழகக் கொடி ஒன்றுடன் வர வேண்டுகிறேன்.

"பொள்ளாச்சியில் கூடிய கடந்த மாவட்டக் குழுக் கூட்டத்தில், மாவட்டக் கழகச் செலவுகளுக்கு ஒவ்வொரு கிளையும் தனது பங்காக ஒவ்வொரு மாதமும் 10-ந் தேதிக்குள் ரூபாய் ஒன்று சந்தாவாக அனுப்பித் தர வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு, அம்முடிவின் நகலும், வேண்டுகோளும் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது; அதன்படி இதுவரை தங்கள் கழகச் சந்தாவை (மே, ஜூன்) அனுப்பாமல் இருந்திருந்தால் அதை உடன் கொண்டு வந்து செலுத்துமாறு வேண்டுகிறேன்.

"தங்கள் கிளைக்கென விதிக்கப்பட்டுள்ள மாநில மாநாட்டு நிதிக்கான பங்குத் தொகையை இதுவரை செலுத்தாமல் இருந்திருந்தால் அதனையும் நேரில் வந்து செலுத்துமாறு வேண்டுகிறேன்,"

என்று, கோவை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அறிவிக்கிறார்.

நிகழ்ச்சி நிரல்:

காலை 7 மணி: இரயிலடியில் வரவேற்பு.

காலை 10 மணி: கோவை மாவட்ட கிளைக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் மாநாடு.

பகல் 1 மணி: விருந்து.

மாலை 4 மணி: தெப்பக்குளம் வீதியிலுள்ள நகர கழக அலுவலகத்திலிருந்து ஊர்வலம்

மாலை 6 மணிக்கு: சிதம்பரம் பூங்காவில் நிதியளிப்புச் கூட்டம்

* * *

குறிப்பு: விருந்தில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் கோவை நகரக் கிளையின் துணைச் செயலாளரிடம் 2—7—55-க்குள் ஒரு ரூபாய் செலுத்தினால் கலந்து கொள்ள அனுமதி உண்டு.

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

பாண்டியன் விளையாட்டு மன்ற ஆண்டு விழாவில் பேசுகிறார்

★

1—7—55 மாலை 6 மணிக்கு, சென்னை, ஏழுகிணறு பாரக்ஸ் விளையாட்டு அரங்கு-பன்னீர் செல்வம் மைதானத்தில், பாண்டியன் விளையாட்டு மன்ற ஆண்டு விழா, தோழர் வி. முனுசாமி தலைமையில் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசுவர்.

குறிப்பு: பொதுக்கூட்டத்தில், சென்னை 9-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் பொதுச்செயலாளருக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

அறிவு வளர்ச்சி மன்றம் இரண்டாம் ஆண்டு விழா

1—7—55 மாலை 6 மணிக்கு, சென்னை-ஆயிரம் விளக்கு, அஜீஸ் முல்க் 4-வது வீதியில், தோழர் நன்னன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், வி. முனுசாமி எம். பி., ஆகியோர் பேசுவர்.

தமிழரசுக் கழக மாநாடுகள்

2—7—55 மாலை 4 மணிக்கு, சென்னை, செயிண்ட் மேரீஸ் மண்டபத்தில், தமிழ் இலக்கிய மாநாடு, திரு. இளவழகனார் தலைமையில் நடைபெறும். திரு. ஜி. உமாபதி வரவேற்புரையாற்றுவார். திரு. ஐயம்பெருமாள் துவக்கவுரையாற்றுவார். திருவாளர்கள் ம. பொ. சிவஞானம், எஸ். மீனா சிசுந்தரம், கா. மு. ஷெரீப், கு. ச. கிருஷ்ண மூர்த்தி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

3—7—55 காலை 9 மணிக்கு, தமிழரசுக் கழக மாநாடு, திரு ம. பொ. சிவஞானம் தலைமையில் நடைபெறும். திரு. பி. எஸ். மணி துவக்கிவைப்பார். திரு. சின்ன அண்ணாமலை வரவேற்புரையாற்றுவார். பிற்பகல் 4 மணிக்கு. திருவாளர்கள் வானம்பாடி ஷம்சுதீன், எஸ் டி. பாலு, கே.விநாயகம் எம் எல்.ஏ, கா. மு. ஷெரீப், ந. ரா வீரஜின்னு, எஸ். ரங்கநாதன், முனுசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

ஏனோ இந்த நிராகரிப்பு?

அணுசக்தியால் இயங்கக்கூடிய வர்த்தகக் கப்பல் ஒன்றைக் கட்ட வேண்டும் என்று அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசனோவர் அனுப்பிய கோரிக்கையை அமெரிக்க செனேட் சபை நிராகரித்துவிட்டதாகச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இந்தக் கோரிக்கை பற்றிய பிரரேபணை குறித்து வாக்கெடுப்பு நடைபெற்றபோது, பிரரேபணைக்கு ஆதரவாக 41 வாக்குகளும் எதிராக 42 வாக்குகளும் பதிவாகி, ஒரு வாக்கு வித்தியாசத்தில் நிராகரிக்கப்பட்டது.

ஆனால் பிரதிநிதி சபையும் ஏற்கனவே ஐசனோவரின் இக்கோரிக்கையை நிராகரித்துவிட்டது.

இராணுவத்தினர் கைவிடுகின்றனர்!

வருகிற ஜூலைத் திங்கள் 1-ந் தேதி முதல், இந்திய இராணுவ, கடல், விமானப் படையிலுள்ள அதிகாரிகள் உட்பட்ட இராணுவத்தினர் அருந்தும் பானங்களில் மதுவகை கலக்கப்படாது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஏற்பாட்டிற்கு, முப்படைக் காரியாலயத் தலைமை அதிகாரிகளும் ஒப்புதல் தந்துள்ளனராம.

நகர்ப்புறக் குடியிருப்புகளில் வாழ்வோருக்குப் பாதுகாப்பு

சென்னை சர்க்கார் அவசரச் சட்டம் பிறப்பிக்கிறது

சென்னை, ஜூன் 29—

நகரமன்ற நிர்வாகங்களின் கீழ் இருந்துவரும் நகரங்களில், காலியாகக்கிடந்த மனைகளை வாடகைக்குப் பெற்றுக்கொண்டு அவற்றில் கட்டிடம் கட்டிக் குடியிருக்கும் ஏழைகள் வெளியேற்றப்படுவதைத் தடுத்து, அவர்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்காக சென்னை மாநில சர்க்கார், சென்னை கவர்னர் பிரகாசாவைக் கொண்டு ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்திருக்கிறார்கள்.

இந்தச் சட்டம், சென்னை நகரில் உள்ள குடிக்கூலியாளர்களின் பாதுகாப்புச் சட்டத்திற்குத் திருத்தமாகக் கொண்டுவரப்பட்டுள்ளது.

சென்னை நகர் மட்டுமல்லாமல் மற்ற முனிசிபல் நகர்களுக்கும் இச்சட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக மதுரை, திருச்சி நகரங்களில் இச்சட்டம் உடனடியாக அமுல் நடத்தப்படும் என்றும் பிறகு உத்தரவின் பேரில் ஏனைய நகரங்களுக்கும் விரிவாக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

காலி இடங்கள் மலிவாகக் கிடைத்த காலத்தில் அவற்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு கட்டிடம் எழுப்பியவர்கள், தற்போது பல இடங்களிலும், அந்த நிலச் சொந்தக்காரர்களால் துன்புறுத்தப்படுகிறார்கள்; மிக அதிகமான வாடகை தரவேண்டுமென்று வலியுறுத்தப்படுகிறார்கள். அதிகமான வாடகை தராவிடின், அவர்களை வெளியேற்றுவதில் நில உரிமையாளர்கள் முனைகின்றனர். இத்தகைய நிலைக்குச் சரியான ஒரு பரிகாரம் காண வேண்டுமென்பதே இந்த அவசரச் சட்டத்தின் முக்கிய நோக்கம் என்று கூறப்பட்டிருக்கிறது.

தங்களுக்கு நியாய வாடகைத் தொகையை நிர்ணயிக்குமாறு குடிக்கூலியாளர்கள், சென்னை நகரில் 'ஸ்மால்காஸ் கோர்ட்'டையும், வெளியிடங்களில் 'சிவில் கோர்ட்'டுகளையும் அணுகலாம்; இதற்காக மட்டுமல்லாமல், தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வாடகைத் தொகை உயர்த்தப்பட்டிருந்தால் அதனைக் குறைக்குமாறும் அந்த நீதி மன்றங்களை அணுகி கேட்டுக்கொள்ளலாம்; அந்தந்தக் கோர்ட்டார் இவற்றை விசாரித்து, தக்க வாடகைத் தொகையை நிர்ணயம் செய்வர்.

அரசாங்க...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மேற்கொள்ள முடியாது என்று மக்கள் சபை உறுப்பினர்கள் கருதுவதாகத் தெரிகிறது என்றும் டாக்டர் கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

கம்யூனிஸ்டான ஏ. கே. கோபாலன், சுமார் 25 மக்கள் சபை உறுப்பினர்கள் கோவாவில் நுழைந்து போராட்டம் நடத்த வேண்டும் என்று யோசனை தெரிவித்ததையும், தனிப்பட்ட முறையில் மக்கள் சபை உறுப்பினர்கள் போரில் ஈடுபடுவதைத் தடுக்கவோ, அல்லது மொத்தமாகப் பலர் செல்வதை ஆதரிக்கவோ மக்கள் சபை உறுப்பினர் மாநாடு முன்வராது என்றும் அவர் கூறினார்.

கோவா விடுதலைப் போராட்டம்

ஆகஸ்டு 15-ல் 15,000 - தொண்டர்கள் கலந்துகொள்வராம்

அசோக் மேத்தா அறிவிப்பு

கோவை, ஜூன் 29—

வருகிற ஆகஸ்டுத் திங்கள் 15-ந் தேதி, 15,000 தொண்டர்கள் கோவா எல்லைக்குள் நுழைவார்கள் என்றும், இந்தியாவின் எல்லா பாகங்களிலிருந்தும் இத்தொண்டர்கள் வந்தால் பெருமைக்குரிய ஒன்றாக அது இருக்குமென்றும் ம. சோ. கட்சித் தலைவர் அசோக் மேத்தா கூறியிருக்கிறார்.

* * *

இந்தியாவின் குறிப்பு:

கோவா தொண்டர்களை 'காட்டுமிராண்டித்தனமா'கப் போர்ச்சுகீசியப் போலீசாரும், அதிகாரிகளும் கொடுமைப்படுத்திவரும் நிகழ்ச்சிகள் குறித்து இந்திய சர்க்கார் 'கடுமையான' ஆட்சேபனைகள் தெரிவித்திருக்கின்றனராம

இந்த ஆட்சேபனைக்குறிப்பு புதுடில்லியிலிருக்கும் போர்ச்சுகீசியத் தூதுவராலய அதிகாரி, இந்திய சர்க்கார் அயல் நாட்டு இலாகா காரியாலயத்திற்கு அழைக்கப்பட்டு அவரிடம் கொடுக்கப்பட்டதாம்.

மத்தியதர வர்க்கத்தினருக்கு

வீட்டு வசதி!

சென்னை, ஜூன் 30—

மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும், மத்திய கீழ்த்தர வகுப்பை சேர்ந்தவர்களுக்கும் குடியிருப்பு வசதி செய்வதற்காகச் சென்னை வீடு கட்டும் கூட்டுறவுசங்கத்தினர் சென்னையில் மின்சார இரயில் போக்குவரத்து பாதைக்கு அருகில்—குறிப்பாகச் சேத்துப்பட்டிலும், கோடம்பாக்கத்திலும் வீடுகள் கட்டும் திட்டத்தை ஆரம்பிப்பார்கள் என்று கூறப்படுகிறது

சென்னையிலுள்ள காந்திநகர், கஸ்தூரிபா நகர், வெங்கடேசபுரம், இராஜா அண்ணாமலைபுரம் ஆகிய இடங்களில் இந்த வீடு கட்டும் கூட்டுறவு சங்கம, சென்ற சில ஆண்டுகளுக்கு முன் மத்தியதர வகுப்பினருக்கும், மத்திய கீழ்த்தர வகுப்பினருக்கும் வீடுகள் கட்டித் தந்துள்ளனர்.

தற்போது, தொழிற்சாலைகளில் வேலை செய்யும் மற்றுமுள்ள தொழிலாளர்கட்கு வடசென்னையில் வீடுகட்டித் தரவும் மேற்படி சங்கம் முடிவு செய்துள்ளதாகவும் தெரியவருகிறது

சென்னை பெரம்பூரிலுள்ள கோச்சுத் தொழிற்சாலைக்கு அருகில் தொழிலாளர்களுக்காக ரூ 25 லட்சம் செலவில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன

இந்த 25 லட்ச ரூபாயில் 30 சதவிகிதத் தொகையை மானியமாகவும், மீதி 70 சதவிகிதத் தொகையைக் கடனாகவும் மத்திய சர்க்கார் கொடுத்து வருகிறதாம் கடன் தொகை தவணைகளில் திருப்பிச் செலுத்தப்படும் என்று தெரிகிறது

குடியிருப்பு வசதிக்கு நிபுணர் குழு?

சிம்லா, ஜூன் 27—

நாட்டில் குடியிருப்பு வசதித் திட்டங்களுக்கென குடியிருப்பு வசதி நிபுணர்கள் குழு ஒன்று அமைக்கப்படும் என்றும், இக்குழுவில், நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் உறுப்பினர்கள் நியமனம் பெறுவர் என்றும் இந்திய சர்க்கார் திட்ட இலாகா அமைச்சர் குல்ஜாரிலால் நந்தா தெரிவித்திருக்கிறார்.

சேரிகளின் சொந்தக்காரர்கள் அந்தந்தச் சேரிகளைச் சீர்திருத்தாவிட்டால், அவைகளின் நிர்வாகம் சர்க்காரால் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறு கிறது ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன், எம். ஏ.